# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :mtdruittttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 10 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் 01.06.2019 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் அன்பான வணக்கம் !



## திருவள்ளுவர்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு"

என ஈரடி குறளில் தொடங்கி, உலகத் தத்துவங்கள் அனைத்தையும், மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். இவர் கி.மு 31ம் ஆண்டு சென்னையில் பிறந்தார் என்று கூறப்படுகிறது. திருக்குறளில் உள்ள அனைத்து கருத்துகளும், இனம், மதம், மொழி, பாலின பேதங்களின்றி, வாழ்வின் எக்காலத்துக்கும் பொருந்தமானதாக உள்ளது.

இவர் 'தெய்வப் புலவர்', 'பெரு நாவலர்', 'பொய்யா மொழிப் புலவர்' எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

அவர் எழுதிய திருக்குறள் அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

முதல் பிரிவான **'அறத்துப் பாலில்'** இல்லறவியல், துறவறவியல், போன்றவற்றை 38 அத்தியாயங்களில் எடுத்துரைக்கிறார்.

இரண்டாவது பிரிவான **'பொருட்பாலில்'** அரசியல், அமைச்சியல் போன்றவற்றை 70 அத்தியாயங்களில் விளக்கியுள்ளார்.

மூன்றாவது பிரிவான **'இன்பத்துப்பாலில்'** களவியல், கற்பியல் போன்றவற்றை 25 அத்தியாயங்களில் கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் பத்து ஈரடி குறள்களென மொத்தம் 1330 குறள்கள் உள்ளன.

“கற்க கசடற கற்றவை கற்றபின்

நிற்க அதற்குத்தக”

என்ற குறளில், கற்ற கல்விக்கு எற்ப நல்ல வழிகளில் வாழ்க என்று கூறியிருக்கிறார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்பதற்கிணங்க, அவரது நினைவாக, இந்தியாவிலுள்ள சென்னையில் ‘வள்ளுவர் கோட்டம்’ ஒன்றும் கன்னியாகுமரியில், 133 அடி உயரமுள்ள பிரம்மாண்டமான சிலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

“தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலர்

தோன்றிலும் தோன்றாமை நன்று”

என்பதற்கிணங்க, திருவள்ளுவர் மறைந்தாலும், அவர் படைத்த திருக்குறள், தமிழர்களின் புகழை என்றும் உலகளவில் ஓங்கச் செய்கிறது.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி.விஜயசுதா குகனேஸ்வரன்.